**செ. கு. எண்**:237 **நாள்**:05-12-2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 5.12.2011

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை கிராமம், கணபதி நகர், ஜேசீஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அருகில், காங்கயம் - திருப்பூர் மாநில நெடுஞ்சாலையில் **4.12.2011** அன்று நின்று கொண்டிருந்த லாரியின் மீது, மன்னார்குடியிலிருந்து திருச்சிராப்பள்ளி நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், திருப்பூர் மாவட்டம், பூலுவபட்டி கிராமம், போயம்பாளையம் பிரிவு மேற்கு, நந்தா நகரைச் சேர்ந்த அப்பேருந்தின் நடத்துநர் திரு. பொ.ஆறுமுகம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், சேமனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசன் என்பவரின் மகன் கண்ணன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த நடத்துநர் திரு. ஆறுமுகம் மற்றும் திரு. கண்ணன் ஆகியோர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் 12 பேர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருப்பூர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**